# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 243/42— 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/42 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (70)/76.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1976, திசெம்பர் 17.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் அவசரகால (நீர்ப்பாசன வேலைகளைப் பாதுகாத்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், பயனுடையனவாதல் வேண்டும்.

3. (அ) நீர்ப்பாசன வேலையொன்று எவ்விடப்பரப்பில் அமைந்துள்ளதோ அவ்விடப்பரப்பில் அதிகாரம் கொண்டுள்ள பொறியியலாளர், அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது அத்தகைய இடப்பரப்பின் கமத்தொழில் விளைவுப்பெருக்கக் குழுவால் நியமிக்கப்பட்ட முகவரொருவர் தவிர்ந்த வேறு ஆளெவரும், அத்தகைய நீர்ப்பாசன வேலையைத் தொழிற்படுத்தலோ, அதில் கையிடுதலோ, அதைத் தடைசெய்தலோ அல்லது அதனோடு எவ்விதத்திலும் தலையிடுதலோ, அல்லது அத்தகைய நீர்ப்பாசன வேலையிலிருந்து நீரைத் திசைமாற்றலோ ஆகாது.

(ஆ) ஆளெவரும், பயிர்ச்செய்கைக்கான ஏதேனும் பருவகாலத்தில், அத்தகைய பயிர்ச்செய்கைப் பருவகாலம் தொடர்பில் நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நீரைப்பெற உரித்துடையவராயிருந்தாலொழிய, ஏதேனும் நீர்ப்பாசன வேலையிலிருந்து எவ்விதத்திலும் நீரைப் பயன்படுத்துதலாகாது. குறிப்பிட்ட பயிர்ச்செய்கைப் பருவகாலம் ஒன்றில், நீர்ப்பாசன வேலையொன்றிலிருந்து நீரைப் பயன்படுத்துவதற்கு ஆளொருவர் உரித்துடையவர் அல்லது உரித்துடையவரல்லர் என்ற பொருள்பட அந்த நீர்ப்பாசன வேலை அமைந்துள்ளதான நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழொன்று, அத்தகைய நிகழ்வு பற்றிய முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(இ) நீர்ப்பாசன வேலையொன்று தொடர்பில், பொறியியலாளரொருவரது, அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரது, அல்லது கமத்தொழில் விளைவுப்பெருக்கக் குழுவொன்றினது, அல்லது அத்தகைய குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரது பணிகளை நிறைவேற்றுதலோடு ஆளெவரும் தலையிடுதலாகாது.

4. மூன்றும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுள் எதனையும் மீறுகின்ற அல்லது மீறியுள்ள எவரேனுமாளை எவரேனும் பொலிசு அலுவலர் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம் என்பதுடன், அத்தகைய ஆளை நீதிவானொருவர் முன்னர் கொணருதலும் வேண்டும்; அத்துடன் நீதிவான், அவரினாற் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, அம்முறைப்பாடானது விழலானது அல்லது அலைக்கழிக்கும் தன்மைத்தானது அல்லது அற்ப தன்மைத்தானது என அவர் கருதினாலொழிய, அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைத்தலும் வேண்டும்.

5. (1) ஆளொருவர் 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் விளக்கமறியலில் வைக்கப்படுமிடத்து, அத்தகைய விளக்கமறியல் பற்றியும் அவ்விடயம் தொடர்பிலான நிபந்தனைகளையும் நீதிவான் நீதியமைச்சரின் செயலாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்படுமிடத்து, நீதியமைச்சரின் செயலாளர் அவரது கட்டளையிற் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய நியதிகள் அல்லது நிபந்தனைகள் எவையேனுமிருப்பின், அவற்றுக் கமைய அத்தகைய ஆள் விடுவிக்கப்படுதல் வேண்டுமென மறியற்சாலைகள் ஆணையாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான அக்கட்டளையின் மூலம் செயலாளர் அவரது தற்றுணிபின்படி பணித்தாலொழிய, அவ்வாள், அவருக் கெதிரான நடவடிக்கைகள் முடிவுறும்வரை மறியற்சாலைகள் ஆணையாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின்கீழ் நீதியமைச்சரின் செயலாளரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பெற்றுக் கொண்டவுடனும் அத்தகைய கட்டளையைப் பயனுறச் செய்தல் மறியற்சாலைகள் ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) எவையேனும் நியதிகள் அல்லது நிபந்தனைகளுக்கமைய எவரேனுமாள் இவ்வொழுங்குவிதியின்கீழ் விடுவிக்கப்படுமிடத்து, அத்தகைய நியதிகள் அல்லது நிபந்தனைகளுக்கியைய ஒழுகுதல் அல்லது இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறும் எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு, அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத காலத்துக்கு இருவகையிலொருவகை மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

7. இவ்வொழுங்குவிதிகளில்—

"கமத்தொழில் விளைவுப்பெருக்கக் குழு" என்பது 1972 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கமத்தொழில் விளைவுப்பெருக்கச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழு என்று பொருளாகும் ;

"அரசாங்க அதிபர்" என்பது ஒரு மேலதிக அரசாங்க அதிபரையும், உதவி அரசாங்க அதிபரையும், மேலதிக உதவி அரசாங்க அதிபரையும் உள்ளடக்கும் ;

"நீர்ப்பாசன வேலை" என்பது நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது